# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2349/17 - 2023 සැප්තැම්බර් මස 12 වැනි අඟහරුවාදා - 2023.09.12

2349/17 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 104/44 (vi) (A)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டம்**

114 ஆம் பிரிவின்கீழான கட்டளை

பின்வரும் பெயர்களைக்கொண்ட “அஞ்சலி மற்றும் பிரியஞ்சித் வீரசூரிய நம்பிக்கைப்பொறுப்பு” இன் நம்பிக்கைப்பொறுப்பாளர்களான-

1 ரஜிந்த பிரியஞ்சித் வீரசூரிய;
2. துஷாரி அஞ்சலி திலோதமா டி சில்வா வீரசூரிய; அத்துடன்
3. புத்திரிகா தருஷா டி எஸ் வீரசூரிய,

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் தமது கூட்டிணைப்பிற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு விண்ணப்பித்து உள்ளார்களாதலால்,

மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் கூட்டிணைப்பிற்கு அதிகாரமளித்து-

(அ) கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு செம்புக்குட்டி ஆராய்ச்சிகே டோனா அவந்திகா ரூக்ஷானி சேனாரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டின் யூலை மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 495 ஆம் இலக்கத்தைக்கொண்ட நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்தலின்கீழ் முறையாக நியமிக்கப்பட்ட மேலே பெயரிடப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களும் அவர்களது அடுத்துறுநர்களும் “அஞ்சலி மற்றும் பிரியஞ்சித் வீரசூரிய நம்பிக்கைப்பெறுப்பு” எனும் பெயர் மகுடத்தின்கீழ் பொது இலச்சினையையும் இடையறாவழியுரிமையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும்;

1A - G 40301 — 07 (2023/09)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின்கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்துமாற்றலாம், ஈடுவைக்கலாம், அடமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும்; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின்கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பில் எழுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் இலங்கையில் உள்ள அல்லது வேறு எங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடையளிப்பதற்கும், விடையளிக்கப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனவும்;

பணித்து வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவசியமென எனக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

கலாநிதி **விஜயதாச ராஜபக்ஷ,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023.09.07*

EOG *09-0096*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.